இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 155 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 29 – திங்கள்கிழமை 13 ஜனவரி 2025 – கோவை ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 155 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 29 - Monday 13 January 2025 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


## ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ –

## ஓய்வுக்கே ஓய்வு கொடுத்தவரின் மகன்! கலைஞர் பாதையே வெற்றிப் பாதை!

# அடுத்து அமையப் போவதும் கழக ஆட்சியே!

## சட்டப் பேரவையில் ஆளுநர் உரை மீதான பதிலுரையில் –

## கழக அரசின் சாதனைகளை எடுத்துக்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜன.13 -**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் - ஓய்வுக்கே ஓய்வு கொடுத்தவரின் மகன்’ - “கலைஞர் பாதையே வெற்றிப் பாதை” என்றும் “அடுத்து அமையப் போவதும் கழக ஆட்சியே” என்றும் சட்டப் பேரவையில் ஆளுநர் உரை மீதான பதிலுரையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக அரசின் சாதனைகளை எடுத்துக் காட்டி உறுதிபடத் தெரிவித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

எங்களுக்கு வாக்களித்த மக்களாக இருந்தாலும், எங்களுக்கு வாக்களிக்காத மக்களாக இருந்தாலும், எங்கள் மனச்சாட்சிதான் நீதிபதிகள். மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எங்கள்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2025) சட்டமன்றப் பேரவையில், 2025–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றினார்.

மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல், முழு உழைப்பைத் தந்து, நாங்கள் ஆட்சி நடத்திக்கொண்டு வருகிறோம். அடுத்து அமையப் போகும் அரசும், திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதில் எங்களுக்கு இம்மி அளவும் சந்தேகமில்லை; தமிழ்நாட்டு மக்களுக்கும் சந்தேகமில்லை.

‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழ்நாட்டை மேம்படுத்தும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாக இருப்பவன். இதைத்தவிர எனக்கு வேறு பணிகள் இல்லை. ‘என்னுடைய சிந்தனையும் செயலும் தமிழ்நாடு, தமிழ்நாடு என்றும் தமிழையும், தமிழர்களையும், தமிழ்நாட்டையுமே சுத்தி, சுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**தமிழ்நாட்டை இந்தியாவில் முதன்மை மாநிலமாக உயர்த்திக் காட்டுவேன்!**

நான் பிறந்தபோது ‘ஸ்டாலின்’ என்று பெயர் சூட்டிய தலைவர் கலைஞர், அவர்கள், நான் வளர்ந்த போது ‘உழைப்பு’னுதான் பெயர் சூட்டினார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அப்படி உழைக்கக் கற்றுக் கொடுத்தவரும் அவர்தான். “ஓய்வெடுத்து உழையுங்கள்” என்று ஆலோசனை சொல்கிறவர்களிடம், ‘ஓய்வுக்கே ஓய்வு கொடுத்தவரின் மகன் நான்’ என்று சொல்லுவேன். “தலைவர் பாதையே தனிப் பாதை, கலைஞர் பாதையே வெற்றிப் பாதை” என்று செயல்பட்டு வருகின்றவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி)

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய இருபெரும் தலைவர்கள் உருவாக்கிக் கொடுத்த கொள்கைகளை தலைவர் கலைஞர் அவர்களின் வழிநின்று காப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத் தலைவர் கலைஞர் அடித் தளமிட்ட நவீனத் தமிழ்நாட்டை இந்தியாவில் முதன்மை மாநிலமாக, முன்னோடி மாநிலமாக உயர்த்திக் காட்டுவேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களாட்சிக் காலத்தில் திராவிட மாடல் ஆட்சிதான் பொற்கால ஆட்சி என்று வரலாறு பதிவு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பொற்கால ஆட்சியே காலம் காலமாகத் தொடரும்! தொடரும்! தொடரும்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இவ்வாறு சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் கூறினார்.

# சட்டமன்ற மாண்பை மதிக்க மறுக்கும் ஆளுநர்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை!

“முதலில் எல்லோருக்கும் என்னுடைய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் ‘பராசக்தி’ படத்தில் ஒரு வசனம் எழுதி இருப்பார், ‘**இந்த நீதிமன்றம் எத்தனையோ விசித்திரமான வழக்குகளைப் பார்த்திருக்கிறது**’ என்று! அதேபோல் இந்தச் சட்டமன்றமும், ஆளுநரைப் பொறுத்தவரை சில ஆண்டுகளாக விசித்திரமான காட்சிகளைத்தான் காண்கிறது. ஆளுநர் அவர்கள் வருகிறார், உரையாற்ற வருகிறார். ஆனால், உரையாற்றாமலேயே சென்றுவிடுகிறார். அதனால்தான் ஆளுநரின் செயல்பாடுகளை நான், ‘சிறுபிள்ளைத்தனமானது’ என்று சொன்னேன்.

**தமிழ்நாடு வளருவதை ஜீரணிக்க முடியாத ஆளுநர்!**

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 176 வரையறுத்துள்ளபடி, ஆண்டின் தொடக்கத்தில் சட்டமன்றத்தில் ஆளுநர் உரையாற்ற வேண்டும். அரசால் தயாரித்து வழங்கப்படும் உரையை, அப்படியே வாசிக்க வேண்டும் என்பதுதான் நடைமுறை மரபு. ஆனால், திட்டமிட்டு விதிமீறல் செய்வதில்தான் ஆளுநர் குறியாக இருக்கிறார்.

2021-ஆம் ஆண்டு இப்போதிருக்கும் ஆளுநர், புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டார். 2022-ஆம் ஆண்டு இதே ஆளுநர், தன்னுடைய முதல் உரையை முழுமையாக வாசித்தார். எதையும் மாற்றவில்லை. ஆனால், இந்த மூன்றாண்டு காலமாக என்னென்ன அபத்தமான காரணங்களை எல்லாம் சொல்லி படிப்பதைத் தவிர்த்தார் என்று இந்த அவையில் இருக்கும் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்!

பேரவை தொடங்கும்போது தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதும், அவை நடவடிக்கைகள் முடியும்போது நாட்டுப்பண் ஒலிப்பதும்தான் காலம் காலமாகப் பின்பற்றப்படும் மரபு. இந்த விளக்கத்தைச் சொன்ன பிறகும் அவர் உரையாற்ற மறுக்கிறார், தவிர்க்கிறார்! தமிழ்நாடு வளர்ந்து வருவதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

இன்றைக்கு முதலமைச்சராக இருக்கும் நான், சாதாரணமானவனாக இருக்கலாம். ஆனால் இந்தச் சட்டமன்றம், நூற்றாண்டு வரலாறு கொண்ட சட்டமன்றம்; (மேசையைத் தட்டும் ஒலி) கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளால் உருவான சட்டமன்றம். இந்த சட்டமன்றத்தின் மாண்பையும் மதிக்காமல் – மக்களது எண்ணங்களுக்கும் மதிப்புத் தராமல் தமிழ்த்தாய் வாழ்த்தையே அவமானப்படுத்தத் துணிந்ததன் மூலமாக, தான் வகிக்கும் பதவிக்கும் பொறுப்புக்கும் இழுக்கு ஏற்படுத்தும் காரியத்தை அரசியல் உள்நோக்கத்துடன் ஆளுநர் செய்வது இந்த மன்றம் இதுவரை காணாதது; இனியும் காணக் கூடாதது!

**7வது முறையும் ஆட்சி அமைப்போம்! ஏற்றம் காணும் அரசு அமைப்போம்!**

அவர் அரசியல் ரீதியாக எங்களைப் புறக்கணிப்பதை நாங்கள் பெரிதாக எடுத்துக்கொள்வது இல்லை. ஏனென்றால், திராவிட இயக்கம் என்பதே, புறக்கணிப்புகள் - அவமானங்கள் - ஒடுக்குதல்கள் ஆகியவற்றுக்கு எதிராக உதயமானதுதான்! (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இயக்கத்தின் மேல் கடைப்பிடிக்கப்பட்ட தீண்டாமைகளையும் மீறித்தான் நூற்றாண்டு கண்டிருக்கிறோம். ஒரு சமூகச் சீர்திருத்த இயக்கம் அரசியல் கட்சியாக மாறி, ஆறாவது முறை ஆட்சியைக் கைப்பற்றிய வரலாறு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத்தான் உண்டு. நிச்சயமாகச் சொல்கிறேன், ஏழாவது முறையும் ஆட்சி அமைத்து ஏற்றம் காணும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் அமையப் போகிறது.” (மேசையைத் தட்டும் ஒலி)

**முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப் பேரவையில் பதிலுரை**

## அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்

# 1 லட்சத்து 8 ஆயிரம் பேருக்கு ரூ. 6 கோடியே 41 லட்சம் சாதனை ஊக்கத்தொகை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, ஜன. 13–**

**“பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒரு இலட்சத்து எட்டாயிரத்து நூற்றைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து பதினெட்டாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்” என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டில் சிறப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் இயங்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தான் பயணிகள் அடர்வு, பேருந்து பயன்பாடு, எரிபொருள் செயல்திறன் ஆகியவற்றில் உயர்ந்து விளங்குகின்றன.

குக்கிராமம் முதல் மாநகரங்கள் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்கு தடையின்றி, போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு ஆகிய அனைத்து நிறுவனங்களிலும் தற்போது சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு ஆகியவற்றில் பணிபுரியும், போக்குவரத்து கழகங்களின் பணியாளர்களில், 2024ஆம் ஆண்டில் 91 நாட்கள் மற்றும் அதற்கு மேலும், ஆனால் 151 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 85 ரூபாய் வீதமும்; 151 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் ஆனால் 200 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 195 ரூபாய் வீதமும், 200 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு 625 ரூபாய் வீதமும் பொங்கல் “சாதனை ஊக்கத் தொகை” வழங்கப்படும்.

இந்த உத்தரவின்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஒரு இலட்சத்து எட்டாயிரத்து நூற்றைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து பதினெட்டாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.